## வணிகவியல்

**1. அமைப்பு வரையறு**

ஆலன் லூயி (அ) ஹேனே அவர்களின் கூற்றுப்படி செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாகப் பிரித்தலும் குறிக்கோள்களை அடையப் பணியாளர்களால் பயன் தரு முறையில் உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஆணைவுரிமைகளையும் வரையறுத்தி வழங்கலையும் ''அமைப்பு'' என்னும் சொல் குறிக்கும்.

**2. கர்த்தா என்பவர் யார்?**

இந்து கூட்டுக் குடும்ப தலைமை உறுப்பினருக்கு ''கர்த்தா'' என்று பெயர். குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு வாரிசுதாரர் என்று பெயர்.

**3. தரவரிசை கோட்பாடு என்றால் என்ன ?**

(ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.) (இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்.

**4. பன்னாட்டு நிறுமங்களுக்கு உதாரணங்கள் தருக.**

1. யூனி லீவர் லிமிடெட் - பிரிட்டிஷ் நிறுமம்
2. யூனியன் கார்டைடு - அமெரிக்க நிறுமம்
3. பிலிப்ஸ் - டச்சு நிறுமம்
4. கோகோ கோலா - அமெரிக்க நிறுமம்

**5. வாரிய அமைப்பின் பொருள் தருக.**

வாரிய அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

**6. ஒருங்கிணைத்தல் என்றால் என்ன ?**

ஒரு அமைப்பின் இலக்கை அடைய அனைத்து நடவடிக்கையும் ஒருங்கிணைக்க வேண்டும். கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**7. வரையறா பொறுப்பு என்றால் என்ன ?**

தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறா பொறுப்பு வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில் தன் சொந்த சொத்துக்களிலிருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.

**8. வளாகம் வரையிலக்கணம் தருக.**

தன் சொந்த மூலதனத்தை முதலீடு செய்து தன் சொந்த திறனையும் நுண்ணறிவையும் பயன்படுத்தி இலாப நட்டங்களை தானே ஏற்றுக் கொள்ளும் ஓர் அமைப்பு ஆகும்.

**9. வரையறுத்த கூட்டாண்மை என்றால் என்ன ?**

(i) கூட்டாளியின் பொறுப்பு வரையறுக்கப்பட்டு இருக்கும்.
(ii) ஆனால் ஒரு கூட்டாளியின் பொறுப்பு மட்டும் வரையறா பொறுப்பாகும்.
(iii) இவ்வகை கூட்டாண்மை இந்தியாவில் இல்லை.

**10. கூட்டு மற்றுத் தனிப்பொறுப்பு என்றால் என்ன ?**

(i) கடனீந்தோர் தங்கள் தொகையை அனைத்து கூட்டாளியிடம் பெறுவது கூட்டு பொறுப்பு
(ii) ஏதேனும் ஒரு கூட்டாளியிடம் பெறுவது தனி பொறுப்பு

**11. கூட்டாண்மை வரையிலக்கணம்**

இந்திய கூட்டாண்மை சட்டம் 1932 பிரிவு 4-ன்படி அனைவரும் சேர்ந்தோ அல்லது அனைவருக்குமாக ஒருவரோ ஒரு தொழிலை நடத்தவும் அதில் ஏற்படும் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்ளவும் உடன்படும் நபர்களுக்கிடையேயான உறவு முறையாகும்.

**12. கூட்டுறவின் வரைவிலக்கணம்**



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கூட்டுறவு சங்கச் சட்டம் 1812-ன்படி "கூட்டுறவு சங்க விதிகளின் முறைப்படி அதன் விதிமுறைகளுக்கு ஏற்ப அதன் அங்கத்தினர்களின் நலன்களை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்."

**13 ஒரு நபர் ஒருவாக்கு குறிப்பு வரைக.**

(i) கூட்டுறவின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்துள்ளது.

(ii) எவ்வளவு பங்கு தொகை செலுத்தி இருந்தாலும் ஒரு நபருக்கு ஒரு வாக்கு அளிக்கப்படுகிறது.

**14. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார் ?**

(i) இராபர்ட் ஓவன் 1844-ல் இங்கிலாந்தில் 28 உறுப்பினருடன் இராக்டேல் முன்னோடிகள் சங்கம் தொடங்கினர்.

(ii) இராபர்ட் ஓவன் கூட்டுறவின் தந்தை ஆவார்.

**15. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?**

உறுப்பினர்கள் கூட்டுறவு சங்கத்தை எந்த அளவுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அடிப்படையில் 14%க்கு மிகாமல் செலுத்தப்பட்ட பங்குமுதலுக்கு பங்காதாயம் வழங்கப்படுகிறது.

**16. கூட்டுறவு சிறப்பங்காடிக்கு 4 (எ.கா) தருக.**

சென்னை - காமதேனு சிறப்பங்காடி

கோவை - சிந்தாமணி சிறப்பங்காடி

வேலூர் - கற்பகம் சிறப்பங்காடி

சேலம் - பொன்னி சிறப்பங்காடி

**17. அரசுத் தொழில் வரைவிலக்கணம் தருக.**

உற்பத்தி விவசாயம், நிதி, வணிகம் ஆகிய தொழில்களின் ஈடுபட்டிருக்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம். - A.H.ஹேன்சன்

**18. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?**

ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் தொழில் மற்றும் வாணிக அமைப்புகளை அரசு ஏற்று நடத்துவது நாட்டுடைமையாக்கம் எனப்படும்.

**19. துறைவாரி அமைப்புக்கு 4 எடுத்துக்காட்டுக்கள் தருக.**

ரயில் போக்குவரத்து தொலைபேசி தொலைக்காட்சி அஞ்சல்

**20. அரசு நிறுமம் என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தின் செலுத்தப்பெற்ற பங்கு முதலில் 51%க்கு குறையாமல் மத்திய (அ) மாநில அரசு வைத்திருக்குமானால் அதனை அரசு நிறுமம் எனலாம்.

**21. அரசு நிறுமத்திற்கு 4 எடுத்துக்காட்டுக்கள் தருக.**

பெல் (BHEL), செய்ல் (SAIL), நிலக்கரி சுரங்க நிறுவனம் அரசுப்போக்குவரதுதுக் கழகம்.

**22. பொது கழகத்தின் மேலாண்மை குறித்து எழுதுக.**

1) பொது கழகம் என்பது பாராளுமன்றமோ (அ) சட்டமன்றமோ இயற்றும் தனி சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சி உரிமை பெற்ற நிறுமம்.

2) இது இயக்குனரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.

**23. வரையறு பொறுப்பு என்றால் என்ன?**

ஒரு நபர் தான் வைத்திருக்கும் பங்குகள் மீது செலுத்த பெறாத தொகை அளவிற்கு அவர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பையே வரையறு பொறுப்பு என்கிறோம்.

**24. தாலனீட்டு பத்திரம் என்றால் என்ன ?**



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

1) ஒரு கடனை ஒப்பு கொள்ளும் (அ) கடனை ஏற்படுத்து:ம ஒரு ஆவணமே கடனீட்டு பத்திரம் எனப்படும்.
2) இது நீண்டகால கடன்களை திரட்டும் வழிகளுள் மிகவும் முக்கியமானதாகும்.

**25. சட்டமுறை கூட்டம் என்றால் என்ன ?**

1) பொது வரையறு நிறுமத்தின் பங்குணர்களின் முதல் கூட்டமாகும். இது சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டள்ளது.
2) உரிமம் பெற்று ஆறு மாதத்திற்குள் ஒரு மாதத்திற்கு பின்னர் இக்கூட்டத்தை கூட்ட வேண்டும் நிறும வாழ்வுகாலத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறும்.

**26. பகராள் என்பவர் யார்**

ஒரு பொது கூட்டத்தின் தனக்கு பதில் கலந்து கொள்ள பங்கு நிறும உறுப்பினரால் நியமிக்கப்படும்

நபரே பகராள். பகராள் ஒருவரை நியமிக்கும் ஆணை பத்திரைத்தையும் பகராள் என்றும் சொல் குறிக்கும்.

**27. நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன ?**

i) கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சி நிரல்
ii) நிறும செயலர் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கிறார்.

**28. குறைவெண் என்றால் என்ன ?**

தீர்மானம் நிறைவேற்ற நடைபெறும் கூட்த்தில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கையே குறைவெண்.

**29. நிகழ்ச்சி குறிப்பேடு :**

(i) நிறுமக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப் பெற்ற முடிவுகளின் பதிவுகள் தான் நிகழ்ச்சிக் குறிப்பு ஏடு எனப்படுகிறது.
(ii) பதிவுகள் உண்மையானதாகவும், பொருள் வேறுபாடின்றியும் இருத்தல் வேண்டும்.

**30. மாற்று இயக்குநர்**

இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் கூட்டம் நடைபெறும் மாநிலத்தை விட்டு வெளியில் சென்றிருந்தால், அவருக்கு பதிலாக இயக்குநர் அவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபர் மாற்று இயக்குநர் எனப்படுகின்றார்.

**31. பங்கு மாற்றகம்**

வேரஸ்டின் கூற்றுப்படி பங்கு மாற்றகம் என்பது வாங்கியவர் மற்றும் விற்பவர் ஒரு இடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள், பங்குகளை கையாளும் ஒரு இடமே ஆகும்.

**32. பட்டியலிடுதல் :**

(i) பங்கு மாற்றகத்தின் அலுவலகப் பட்டியலில் நிறுமத்தின் பத்திரங்களை சேர்ப்பது பட்டியலிடுதல் எனப்படும்.
(ii) பட்டியலிடுதல் அனைத்து பொது நிறுமங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**33. போல்ட் :**

(i) போல்ட் என்பது மும்பைப் பங்குச் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள வணிகச் செயலாகும்.
(ii) இது ஆணை மற்றும் விலை நிலவரத்தின் அடிப்படையில் செயல்படுவதாகும்.

**34. ஊக வணிகர்**

(i) எதிர்காலத்தில் இலாபத்தில் விற்கும் நோக்குடன் பத்திரங்களைத் தற்போது வாங்குபவர்களை ஊக வணிகர் எனப்படுகின்றார்.
(ii) இவர்கள் உண்மையான முதலீட்டாளர்கள் அல்லர்.

**35. பத்திரம் :**



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஒருவரின் உடமை உரிமை (பங்கு) அல்லது கடனீட்டு உரிமையைக் (கடனீட்டுப்பத்திரம்) குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணமாகும்.

## 8 Marks

**1. இந்து கூட்டு குடும்ப வணிகம் குறிப்பு வரைக.**

- இவ்வணிகம் இந்தியாவில் மட்டுமே காணப்படும்.
- இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் பேரன் ஆகியோர் அடங்குவர்.
- இவர்களின் சொத்துக்கள் கூட்டுச் சொத்தாகும்.
- இவ்வணிகத்தின் தலைமை உறுப்பினர் கர்த்தா எனப்படுபவர்
- மற்ற வாரிசுதாரர்கள் கூட்டு வாரிசுதாரர் எனப்படுவர்.
- இவர்கள் பெரும்பாலும் விவசாயம், சிறுதொழிற்சாலை போன்ற தொழில்களை மேற்கொள்வர்.
- இவ்வணிகத்தின் மிட்டக்ரா, தாயபாகா என இரு சட்டங்கள் பின்பற்றப்படுகிறது.
- இவ்வணிகம் இந்து சட்டத்தின்படி நடத்தப்படுகிறது.

**2. கூட்டாண்மையில் இளவரின் நிலை**

18 வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்பர். இளவர் கூட்டாளியாக முடியாது. அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கனொண்டால் கூ:டடாண்மையின் பயன்களுக்கு மட்டும் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

<u>உரிமை வயதை அடையும் முன் இளவரின் நிலை :</u>

- தொழிலின் சொத்திலும், லாபத்திலும் பங்கேற்க உரிமை
- நிறுவன கணக்குகளை பார்வையிட்டு நகலெடுக்க உரிமை.
- நிறுவனத்தின் நட்டங்களுக்கு பொறுப்பாக மாட்டார்.

<u>உரிமை வயதை அறைந்தபின் இளவரின் நிலை :</u>

- உரிமை வயதை அடைந்த பின் இளவராக இருப்பதா வேண்டாமா ? என்பதை 6 மாதத்திற்குள் அறிவிக்க வேண்டும். இல்லையெனில் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் முதல் உள்ள கடன்களுக்கு பொறுப்பாவார்.

**3. பன்னாட்டு நிறுமம் குறிப்பு வரைக,**

- பன்னாட்டு நிறுமம்ன என்ற சொல் இரண்டு பதங்களை கொண்டது. பன்–நாடு=பன்னாடு
- இது பல நாடுகளில் இயங்கி வரும் நிறுமம் எனப்படும்.
- இது உலக அளவில் பெரியது. பலமிக்கவன், உலக வியாபாாரம், பன்னாட்டு வியாபாரம் என அழைக்கப்படும்.
- இது ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்.
- இது பெரிய அளவில் செயல்படும்.
- இதனால் போக்குவரத்து செலவுகள் குறைகிறது.
- உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் உள்ளன.
- எடுத்துக்காட்டு (1) பிலிப்ஸ் (2) கோகோகோலா கழகம்

**4. கூட்டாளிகளின் வகைகள்**

<u>உழையா கூட்டாளி :-</u>

நிறுவனத்தின் மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளி உழையா கூ:டடாளி (அ) உறங்கும் கூட்டாளி எனப்படுவார்.

<u>பெயரளவு கூட்டாளி :-</u>

இவர் கூட்டாண்மையில் முதலிடுவதும் இல்லை. நிர்வாகத்தில் பங்கேற்பதும் இல்லை. தனது பெயரை மட்டும் கூட்டாளியாக பயன்படுத்த அனுமதிக்கிறார். இவர் நிறுவன கடன்களுக்கு பொறுப்பாவார்.

<u>இளவர் கூட்டாளி :-</u>

18 வயதை பூர்த்தி செயலாத நபரை இளவர் என்பவர் காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயது வரை இளவராக கருதப்படுவார். இளவர் கூட்டாளியாக முடியாது. அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் கூட்டாண்மை பயன்களுக்கு மட்டும் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

துணைக் கூட்டாளி :-

ஒரு கூட்டாளியின் லாபத்தை இன்னொருவர் பங்கிட்டு கொண்டால் அவரை துணைக் கூட்டாளி என்பர்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**5. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன ? அதன் உள்ளடக்கங்கள் யாவை ?**

கூட்டாண்மை பற்றிய நிபந்தனைகள், விவரங்கள் அல்ங்கிய எழுத்து வடிவிலான ஆவணமே கூட்டாண்மை ஒப்பாவணம் எனப்படும்.

உள்ளடக்கங்கள் :-

- நிறுமனத்தின் பெயர்
- ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்
- அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
- கூட்டாண்மையில் காலவரையறை
- இலாப பகிர்வு விகிதம்
- ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை
- ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்தின் இருந்து எடுக்கும் தொகை
- முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி

**6. பதிவு செய்யா கூட்டாண்மையின் விளைவுகள்**

- பதிவு செய்யா கூட்டாண்மை நிறுவனம் தனது கூட்டாளிகளை எதிர்த்து வழக்கு தொடுக்க முடியாது.
- பதிவு செய்யா கூட்டாண்மை நிறுவனம் மூன்றாம் நபருக்கு எதிராக ரூ.100-க்கு மேல் திரும்ப பெற இயலாது.
- பதிவு செய்யா கூட்டாண்மை நிறுவனம் ஒன்றின் கூட்டாளி தனது உரிமைகளை நிலைநாட்ட மற்ற கூட்டாளிகள் மீது தொடுக்க முடியாது.
- பதிவு செய்யா கூட்டாண்மை நிறுவனத் தனது வியாபார குறிகள், பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்த கூடாது என கூறும் உரிமை இழக்கும்.

**7. கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகள்**

- திறமையற்ற மேலாண்மை
  கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மேலாண்மை செய்யும் திறமையற்றவர்கள் ஆவர்.
- வரையறு முதல்
  கூட்டுறவு சங்கத்தில் ஒரு நபர் ஒரு வாக்குமுறை அதிக முதலீடு இவ்வகை கடை செய்கிறது.
- தக்க துண்டுகோல் இல்லாமை
  கூட்டுறவு சங்கத்தின் உறுப்பனிர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.
- ஒற்றுமையின்மை
  கூட்டுறவு சங்கத்தில் உறுப்பனிர்கள் ஒற்றுமையால் இருப்பதில்லை
- உரிமையை மாற்ற இயலாமை
  கூட்டுறவு சங்கத்தின் பங்குகள் மாற்றி கொடுக்க இயலாது
- இரகசியம் காவாமை
  கூட்டுறவு சங்கத்தின் நடவடிக்கைகள் சங்க கூட்டத்தில் விவாதிக்கபடுவதால் இரகசியம் காக்கப்படுவதில்லை.
- கடன் வசதியின்மை
  நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடன் வசதியளிப்பதில்லை.

**8. கூட்டுறவு சிறப்பங்காடியில் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகள்**

இது பேரளவில் நடத்தப்படு:ம சில்லறை வியாபார அமைப்பாகும். நாள்தோறும் பயன்படுத்தப்படும் வீட்டு பொருட்கள் பல துறைகளில் விற்பாண்மையர் உதவியின்றி விற்கப்படுகிறது. இது இலாப நோக்குடன் அமைக்கப்படுகிறது.

<u>சிறப்பியல்புகள் :-</u>

- பேரளவு சில்லறை விற்பனை செய்யும் அமைப்பு
- பல வகையான பொருட்கள் கிடைக்குமிடம்
- சுயசேவைப்பிரிவு முறையில் நடத்தப்படுகிறது
- சுய சேவைபிரிவில் விற்பாண்மையர் தேவை ஏற்படுவதில்லை
- இதன் தோற்றம் பல துறைகளை கொண்டாகும்.
- ரொக்க விற்பனை அடிப்படையில் வியாபாரம் செய்யப்படும்
- பொருட்களில் கலப்படம் தவிர்க்கப்படுகிறது,



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

- அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

**பங்குகளை வட்டத்தில் வெளியிடுவதற்கான நிபந்தனைகள் யாவை ?**

1. பங்குகள் முன்னரே வெளியிட்ட வகையைச் சார்ந்ததாக இருத்தல்.
2. சாதாரண தீர்மானத்தின் மூலம் அதிகாரம் வழங்குதல்
3. மைய அரசு ஒப்புதல் பெறுதல்
4. உயர்ந்தளவு தள்ளுபடி 10%

**9. முதலீட்டாளர்களுக்கும், ஊக வணிகர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் :**

| | முதலீட்டாளர்கள் | ஊக வணிகர்கள் |
|---|---|---|
| 1. | முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவர் | முதலீடுகளின் மதிப்்ப அதிகரிப்பதிலும், இலாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2. | முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தையே விரும்புவர் |
| 3. | இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4. | நிலையான வருவாய் | நிலையற்ற ஆதாயம் |
| 5. | நீண்ட காலம் ஈடுபாடும், பொறுப்பும் உடையவர் | குறுகிய காலம் ஈடுபாடும், பொறுப்பும் உடையவர் |

**11. பொதுத்துறைக்கும், தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகள்**

| வ. எண் | பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | இரட்டை நோக்கம் கொண்டது<br>1. சேவை நோக்கம்<br>2. பொருளாதார முன்னேற்றம் | இலாப நோக்கம் |
| 2. | வரையறா நிதி | வரையறுக்கப்பட்ட நிதி |
| 3. | செல்வமும், வருமானமும் செறிவடைவதை தடுக்க முடியும் | பொருளாதார உரிமை செறிவடைவதை தூண்டுகிறது |
| 4. | தனியார் துறையில் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்று நடத்துதல் | இலாபம் அதிகமாக உள்ள தொழில்களை மட்டும் நடத்துதல் |
| 5. | நாட்டின் வளங்களை பாதுகாக்கின்றன | நாட்டின் வளங்களை சுரண்டுகின்றன. |
| 6. | அனைத்து பகுதிகளும் சமமாக வளர்ச்சி பெற செய்யப்படுகின்றன. | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதில்லை |
| 7. | நுகர்வோர்களின் நலனைக் காக்கிறது | நுகர்வோர் சுரண்டப்படுகின்றனர். |
| 8. | பணியாளர்களின் நலன் காக்கப்படுகிறது | பணியாளர்களின் நலன் காக்கப்படுவதில்லை |

**12. ஊக வணிகர்களின் வகைகள் :**

காளை :

இவர் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் பத்திரங்களை வாங்குபவர் இவர் எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.

கரடி :

இவர் எதிர்காலத்தில் குறைந்த விலையில் பங்குகளை வாங்கும் எண்ண்ததில் செயல்படுவார். பங்குகளின் விலையைக் குறைக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். எதிலும் கெட்டதையே கான்கின்ற மனப்பாங்கு கொண்டவர்.

கலைமான் :

முன்னெச்சரிக்கை ஊக வணிகர். ஒரு நிறுமத்தின் பங்குகளை முனைமத்தில் வெளியிடிப்படும் என்று அறிந்து அந்நிறுமத்தின் பஞ்குகளை வாங்கி, முனைமம் பெற்று கொண்டு பங்குகளை விற்று விடுவார். இவர் முனை வேட்டையாளர்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

முடவாத்து :-

தற்போது தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கும் ஒரு கரடி ஊக வணிகர் முடவாத்து.

**அமைப்பு முறையேடு என்றால் என்ன ? அதன் உள்ளடக்கங்கள் யாவை**

எந்த அடிப்படை நிபந்தனைகளுடன் ஒரு நிறுமம் உருவாக்கப்பட்டுள்ளதோ அவற்றை உள்ளடக்கிறது.

1. பெயர் குறித்த உட்பிரிவு :

இப்பிரிவில் நிறுமத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் போது i) நிறுமமாக இருந்தால் “வரையறுக்கப்பட்டது” என்றும் தனி நிறுமமாக இருந்தால் “தனி வரையறுக்கப்பட்டது” என்றும் முடியும்.

2. இடங்குறித்த உட்பிரிவு :

இப்பிரிவில் நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

3. நோக்கம் குறித்த உட்பிரிவு :

இப்பிரிவில் நிறுமத்தின் நோக்கம் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கும் நிறுமத்தின் அதிகபட்ச செயல்பாட்டு எல்லையை இப்பிரிவு வகுக்கிறது.

4. பொறுப்பு குறித்த உட்பிரிவு :

இங்குதான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## 20 Marks

**1. அமைப்பின் கோட்பாடுகள் யாவை?**

அமைப்பின் கோட்பாடுகள்

- நோக்கங்களின் ஒருமை
- வேலைப்பகிர்வு
- கட்டுப்பாட்டு வீச்செல்லை
- தரவரிசை கோட்பாடு
- கட்டளையொருமை
- பணிவழி வரைவிலக்கணம்
- ஒருங்கிணைத்தல்
- ஒருமுறை இயக்கம்
- அதிகார ஒப்படைவு
- பொறுப்பு கோட்பாடு

1. நோக்கங்களின் ஒருமை :

ஒரு அமைப்பின் நோக்கம் இலக்கினை அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.

2. வேலைப்பகிர்வு :

தொழில் அமைப்பின் மொத்தப் பணிகளையும் பகிர்வு செய்ய வேண்டும். இது துறைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது.

3. கட்டுப்பாட்டு வீச்செல்லை :

ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் நியாயமான எண்ணிக்கையிலுள்ள பணியாளர்களை மேற்பார்வை செய்ய வேண்டும்.

4. தரவரிசை கோட்பாடு :

ஆணையுரிமையின் வரிசை உயர் மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும். இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்.

5. கட்டளையொருமை :

ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை ஓர் உயர் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும்.

6. பணி வழி வரைவிலக்கணம்

ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம்

7. ஒருங்கிணைத்தல் ஒரு அமைப்பின் இலக்கை அடைய அனைத்து நடவடிக்கையும் ஒருங்கிணைக்க வேண்டும். கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

8. ஒரு முனை இயக்கம்

அமைப்பின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும், ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

9. அதிகார ஒப்படைவு :

ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு கடமையை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும்.

10. பொறுப்பு கோட்பாடு

ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணி பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார்.

**2. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

**பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகள்**

வணிக அமைப்பு

| தனிநபர் நிறுவனங்கள் | அரசு நிறுவனங்கள் |
|---|---|
| 1. தனி வணிகர் | 1. துறை முறை அமைப்பு |
| 2. இந்து கூட்டுக் குடும்பம் | 2. பொதுக் கூட்டுரு |
| 3. கூட்டாண்மை | 3. அரசு நிறுமம் |
| 4. கூட்டுப் பங்கு நிறுமம் | 4. வாரிய அமைப்புகள் |
| 5. கூட்டுறவு அமைப்புகள் | |
| 6. பன்னாட்டு நிறுமங்கள் | |

1. தனி வணிகர் :-
ஒரு தனி நபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும்.
2. இந்துக் கூட்டுக் குடும்பம் :-
இந்துக் கூட்டுக் குடும்ப வணிகத்தை குடும்பத் தலைவர் மூலம் நடத்துவர். குடும்பத் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். குடும்ப உறுப்பினர்களுக்கு கூடடு வாரிசுதாரர் என்று பெயர்.
3. கூட்டாண்மை :-
கூட்டாண்மை என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுவதாகும்.
4. கூட்டுப்பங்கு நிறுமம் :-
ஒரு நிறுமம் என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை நபர் நீண்ட ஆயுட்காலம் உடையது. பொது முத்திரை கொண்டு செயல்படுவது.
5. கூட்டுறவு அமைப்புகள் :-
கூட்டுறவு சங்கம் என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும். கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் சேவை செய்வது ஆகும்.
6. பன்னாட்டு நிறுமங்கள் :-
பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும். எ.கா. பிப்ஸ்

அரசு நிறுவனங்கள்

1. துறைமுறை அமைப்பு :-
இது மத்திய அரசாலோ அல்லது மாநில அரசாலோ நடத்தப்படுவதாகும். எ.கா. ரயில் போக்குவரத்து.
2. பொதுக் கூட்டுரு :-
இது பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட தனிச் சட்டங்களில் உண்டாக்கப்படுவதாகும். எ.கா. இந்திய ரிசர்வ் வங்கி.
3. அரசு நிறுமங்கள் :-
ஒரு நிறுமத்தின் சொத்துப்பெற்ற பங்கு முதல் 51% க்குக் குறையாமல் மத்திய (அ) மாநில அரசு வைத்திருக்குமானால் அதனை அரசு நிறுமம் எனலாம்.
4. வாரிய அமைப்பு :-
வாரிய அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. எ.கா. தமிழ்நாடு மின்சார வாரியம்.

**3. தனியாள் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை ?**



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்கள்

1. தனிநபர் உரிமைகளும் கட்டுப்பாடும்
2. மூலதனம்
3. வரையறாப் பொறுப்பு
4. இலாப நட்டம்
5. தனிச்சட்டம் இல்லை
6. பதிவு
7. வாழ்வு
8. எளிமை
9. உள்ளூர் வியாபாரம்
10. குறைந்த முதல்

1. தனி நபர் உரிமைகளும் கட்டுப்பாடும்

ஒரு தனிநபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும்.

2. மூலதனம்

தனியாள் வணிகத்தில் ஒரு நபர் மட்டுமே முதலீடு செய்கிறார். தொழிலுக்கு தேவையான முதலை தன் சொந்த சேமிப்பிருந்து செலுத்துகிறார்.

3. வரையாப் பொறுப்பு

தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.

4. இலாப-நட்டம்

தனியாள் வணிகத்தில் இலாபம் (அல்லது) நட்டத்தினை தனிநபரே ஏற்க வேண்டும்.

5. தனிச் சட்டம் இல்லை

தனிவணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.

6. பதிவு

தனியாள் வணிகத்தை பதிவு செய்ய வேண்டியதில்லை.

7. வாழ்வு

தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு கிடையாது. தனியாள் உரிமையாளரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும பாதிக்கும்.

8. எளிமை

தனியாள் வணிகத்தை தொடங்குவதும், கலைப்பதும் எளிது.

9. உள்ளூர் வியாபாரம்

பெரும்பான்மையான தனியாள் வணிகம் குறிப்பிட்ட தெரு, வட்டாரம் அல்லது கிராம அளவிலேயே நடைபெறுகின்றன.

10. குறைந்த முதல்

தனியாள் வணிகத்தை துவங்க குறைந்த முதலே போதுமானது.

**4. சமுதாயத்தில் தனி வணிகரின் பங்கினை விவரி.**

சமுதாயத்தில் தனி வணிகரின் பங்கு

1. வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு
2. முதலீட்டிற்கான வாய்ப்பு
3. குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்
4. சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்
5. தரமான பொருட்களை அளித்தல்
6. தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகள்
7. வருமானம் மற்றும் வளங்களைச் சமமாக பகிர்ந்தளித்தல்
8. நுகர்வோருக்கு உதவுதல்

1. வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு

தனியாள் வணிகம் குறைந்த கல்வி உடையவருக்கும் கல்வி அறிவு அற்றவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

2. முதலீட்டிற்கான வாய்ப்பு

சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்குவதற்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

3. குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனியாள் வணிகமானது மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை அளிக்கிறது.

4. சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்
   சிறு உற்பத்தியாளர்களும் தனிவணிகரின் பயன் பெறுகின்றனர்.
5. தரமான பொருட்களை அளித்தல்
   தனி வணிகர் தன் வியாபாரத்தின் நன்மதிப்பைப் காக்க தரமான பொருட்களை விற்பனை செய்கிறார்.
6. தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகள்
   கண்பரிசோதனை முகாம்கள், பூங்காக்களை பராமரித்தல், பள்ளிகளுக்கு அறைகலன்களை வழங்குதல் போன்ற பல்வேறு தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகளை தனிவணிகர்கள் மேற்கொள்கின்றனர்.
7. வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்
   பல நபர்கள் தனியாள் வணிகராக செயல்படுவதால் வருமானம் மற்றும் வளங்களைச் சமமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.
8. நுகர்வோருக்கு உதவுதல்
   தனியாள் வணிகர்கள் நுகர்வோர் வீட்டு வாசலே பொருட்களை கிடைக்கச் செய்கிறார்கள். இதனால் நுகர்வோரின் நேரமும் உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகிறது.

**5. கூட்டாண்மை கலைக்கப்படும் சூழ்நிலைகள் யாவை?**

1. கூட்டாளிகளின் உடன்பாட்டால் – ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் கலைக்கப்படுகிறது.
2. கட்டாயக் கலைப்பு – அனைத்துக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையினால் கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும். செய்யும் தொழில் கூட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும்.
3. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு
   அ. ஒரு கூட்டாளி இறந்துவிட்டால்
   ஆ. கூட்டாண்மையின் காலம் முடிந்தவுடன்
   இ. தொழில் முடிந்தவுடன்
   ஈ. ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்ததை நீதிமன்றம் அறிவித்திருந்தால்
4. விருப்ப முறிக் கூட்டாண்மை அறிவிக்கையால் கலைப்பு
   கூட்டாளி எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் நிறுவனம் கலைக்கப்படலாம்.
5. நீதிமன்றத்தால் கலைப்பு
   அ. கூட்டாளியின் மனச்சமநிலை இழப்பு :
   ஏதேனும் ஒரு கூட்டாளி பித்து நிலை அடைந்தால் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம்.
   ஆ. நிலையான திறமையின்மை :
   கூட்டாளி திறமையாக தொழில் செய்யும் நிலையை இழந்திருந்தால் கலைக்கப்படலாம்.
   இ. உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை :
   உடன்பாட்டை தொடர்ந்து ஒரு கூட்டாளி மீறிக் கொண்டிருந்தால் கூட்டாண்மை கலைக்கப்படலாம்.
   ஈ. ஒழுக்கக் கேடு :
   கூட்டாளி ஒருவர் ஒழுக்கக்கேடான குற்றத்தை செய்தால் கூட்டாண்மை கலைக்கப்படலாம்.
   உ. உரிமை மாற்றம் :
   கூட்டாளி உரிமை முழுவதையும் பிறருக்கு மாற்றிக் கொடுத்தால் கலைக்கலாம்.
   ஊ. நீதி நேர்மை அடிப்படையில் :
   போதிய காரணமுள்ளது என்று நீதுமன்றம் கருதினால் கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

**6. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் யாவை ?**

உரிமைகள் :

1) தொழில் மேலாண்மையில் பங்கேற்க உரிமை உண்டு
2) கருத்தை தெரிவிக்கும் உரிமை
3) கலந்து ஆலோசிக்கும் உரிமை
4) நிறுவன ஏடுகள், கணக்குகளை நகல் எடுக்க உரிமை
5) இலாபத்தில் சமமாக பங்கேற்கும் உரிமை
6) கடன் மற்றும் முன்பணம் மீது வட்டி பெறும் உரிமை
7) செய்த செலவிற்கு ஈட்டுரிமை பெறும் உரிமை



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

8) நிறுவன சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை
9) புதிய கூட்டாளியை சேர்க்க மறுக்கும் உரிமை
10) நிறுவனத்திருந்து ஓய்வு பெறும் உரிமை

கடமைகள் :

1) தனது பணிகளை கவனமுடன் நேர்மையாக செய்தல்
2) மற்ற கூட்டாளியிடம் உண்மையாக, விசுவாசமுடன் நடந்து கொள்ளல்
3) தனக்கு அளிக்கப்பட்ட அதிகார வரம்புக்குள் செயல்படுதல்
4) நட்டத்தில் பங்கேற்றல்
5) கவனக் குறைவால் ஏற்படும் நட்டத்திற்கு ஈட்டுரிமை அளித்தல்
6) தன்னுடைய உரிமையை பிறருக்கு மாற்றாமல் இருத்தல்
7) நிறுவனத்தின் கணக்குகளை உண்மையாக, சரியாக வைத்திருத்தல்
8) நிறுவனத்திற்கு போட்டியாக அதே தொழிலை நடத்தாமல் இருத்தல்
9) நிறுவன சொத்துக்களை வியாபார நலனுக்காக மட்டும் பயன்படுத்துதல்
10) இரகசிய இலாபங்களை ஈட்டக்கூடாது.

**7. கூட்டாண்மைக்கும், கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| | கூட்டாண்மை | கூட்டுபங்குநிறுமம் |
|---|---|---|
| 1. சட்டம் | 1932 ஆம் ஆண்டு கூட்டாண்மை சட்டம் | 1956 ஆம் ஆண்டு நிறுமச் சட்டம். |
| 2. பதிவு | கட்டாயிமில்லை விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம் | பதிவு கட்டாயம் |
| 3.உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்த நபர் - 2<br>அதிகபட்சம் - வங்கித் தொழில் 10<br>பிறதொழில் 20 | தனிவரையறு நிறுமம்<br>குறைந்தது - 2<br>அதிகபட்சம் - 50<br>பொது வரையறு நிறுமம்<br>குறைந்தது - 7<br>அதிகபட்சம் - வரையறை இல்லை |
| 4. பொறுப்பு | கூட்டு மற்றும் தனி பொறுப்பு | பொறுப்பு வரையறுக்கப்பட்டது |
| 5.பங்கு மாற்றம் | உரிமையை மாற்ற இயலாது | பொது நிறுமத்தில் பங்குகளை எளிதாக மாற்ற இயலும். |
| 6. வாழ்வு | நீடித்த வாழ்வு இல்லை | நீடித்த வாழ்வு உண்டு |
| 7. சட்டச் சிக்கல் | சட்டச்சிக்கல்கள் இல்லை | சட்ட சடங்குகள் அதிகம் உண்டு |
| 8. நிதி | முதல் தொகை அதிக அளவில் இல்லை | மிகப்பெரும் முதலை திரட்ட முடியும் |
| 9. தணிக்கை | கட்டாயம் இல்லை | தணிக்கை கண்டிப்பாக செய்ய வேண்டும் |
| 10. கலைப்பு | எப்பொழுது வேண்டுமானாலும் கலைக்கலாம் | சட்டத்தின் உதவியுடன் மட்டுமே கலைக்க முடியும். |
| | | |

**8. பங்குகளுக்கும், கடனீட்டு பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி**

| | பங்குகள் | கடனீட்டு பத்திரங்கள் |
|---|---|---|
| 1. பொருள் | பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் | கடன் பத்திரதாரர் நிறுமத்தின் கடனாளர். |
| 2.இலாபம் வழங்குதல் | இலாபத்தில் பங்காதாயம் வழங்கப்படும் | இலாப நட்டம் கருதாமல் வட்டி வழங்கப்படும் |
| 3. இலாபத்தின் அளவு | பங்காதாய வீதம் மாறக்கூடியது | வட்டி வீதம் மாறாது. |
| 4. இயக்குநர் | பங்காதாயம் வழங்க இயக்குதல் ஒப்புதல் | வட்டி வழங்க ஒப்புதல் தேவையில்லை |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | | |
|---|---|---|
| ஒப்புதல் | தேவை | |
| 5.இலாபத்தை வழங்கல் | பங்காதாயம் இலாப பகிர்வாகும் | வட்டி இலாபத்தின் மீதான செலவாகும் |
| 6. பொறுப்பு | பொறுப்பு வரையறுக்கப்பட்டது | பொறுப்பு இல்லை |
| 7. வட்டத்தில் வெளியிடல் | பங்குகளை நிபந்தனைப்படி வட்டத்தில் வெளியிடலாம் | நிபந்தனைகள் தேவையில்லை |
| 8. சொத்தின் மீது பிணை | நிறுமச் சொத்தில் பங்குநருக்கு ஈடு இல்லை | சொத்தில் பிணை உண்டு |
| 9. கூட்டத்தில் கலந்து கொள்ளல் | கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமையுண்டு | கலந்து கொள்ள உரிமை இல்லை |
| 10. பங்குமுதலை | வாழ்நாளில் திருப்பித்தரத் தக்கதல்ல | திருப்பித் தர முடியும் |

**9. கூட்டுறவு அமைப்பின் இயல்புகள்**

1. தன்னிச்சையாகச் சேரும் சங்கம் :

பலர் தன்னிச்சையாகச் சேர்ந்து உருவாக்கும் அமைப்பு கூட்டுறவுச் சங்கம். ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் சேரலாம். விரும்பும்போது அவர் எதிரிலிருந்து விலகலாம்.

2. சமத்துவம்

கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சரி சன்ம். அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்குக் கிடையாது.

3. மக்களாட்சி முறையில் மேலாண்மை

கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு! வாக்கு மட்டுமே உண்டு.

4. சேவையின் தத்துவம் :

கூட்டுறவு அமைப்பின் முதன்மை நோக்கம் சேவை புரிவது இலாபம் ஈட்டுவது இரண்டாவது நோக்கமாகும்.

5. பன்மர் உறுப்பினராதல்

இவ்வமைப்பு உருவாக்கக் குறைந்தபட்சம் 25 பேர், அதிகபட்சம் வரம்பில்லை.

6. நிதி :-

கூட்டுறவுச் சங்கத்தின் முதல் சம மதிப்புடைய பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் இச்சங்கத்தின் பங்குகள் வாங்குவதன் மூலம் உறுப்பினராகலாம்.

7. உள்ளூர் உறுப்பினர்கள்

உள்ளூரில் வசிப்பவர்களே கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பார்கள். அவர்களிடையே பொதுவான பொருளாதாரச் சிக்கல்கள் இருப்பதற்கு வாய்ப்புண்டு.

8. பரஸ்பர உதவி

சங்கத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பரஸ்பரம் உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் தனக்கும் உதவி செய்து கொண்டு பிறருக்கும் உதவி செய்ய வேண்டும்.

9. சட்டமுறை தணிக்கை :

கூட்டுறவுத் தணிக்கை துறையைச் சார்ந்தே அலுவலர்கள் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்கின்றனர்.

10. ரொக்க வியாபாரம் :

சங்கத்தில் கடன் நடவடிக்கைகள் அனுமதிப்பதில்லை. எல்லா வியாபாரமும் ரொக்கத்தின் அடிப்படையில் நடத்தப்படுகிறது.

| வ. எண் | கூட்டு பங்கு நிறுமம் | கூட்டுறவு சங்கம் |
|---|---|---|
| 1. | லாபம் ஈட்டுவது முதன்மை நோக்கம் | உறுப்பினர்களுக்கு சேவை செய்வது இதன் முதன்மை நோக்கம். |
| 2. | குறைந்தபட்ச உறுப்பினர்<br>தனி நிறுமம் - 2 பொது நிறுமம் - 7 | குறைந்த பட்சம் 25 நபர்கள் தேவை. |
| 3. | உச்ச அளவு எண்ணிக்கை<br>தனி நிறுமம் - 2 பொது நிறுமம் - 7 | அதிகபட்சத்திற்கு வரையறை இல்லை |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | | |
|---|---|---|
| 4. | பல பகுதியில் வாழ்பவர் உறுப்பினர் ஆகலாம். | குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர் மட்டுமே உறுப்பினராக சேர்க்கப்படுபவர் |
| 5. | இந்திய நிலையச் சட்டம் 1956-ன்படி ஒரு நிறுமம் அமைக்கப்படும். | கூட்டுறவுச் சங்க சட்டத்தின்படி அமைக்கப்படும். |
| 6. | ஒரு பங்கு ஒரு வாக்கு | ஒரு நபர் ஒரு வாக்கு |
| 7. | நிறுமத்தில் மனிதனை விட பணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. | சங்கத்தில் பணத்தை விட மனிதனுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. |
| 8. | பங்கு தடையின்றி மாற்றலாம் | பங்குகளை சங்கத்திடமே திருப்பி தர வேண்டும் |
| 9. | பங்குகளின் மதிப்பு உயர்ந்தே இருக்கும். முகமதிப்பலோ, முனைத்திலோ, வட்டத்திலோவெ வெளியிடலாம். | பங்குகளை முகமதிப்பில் மட்டுமே வெளியிடும் |
| 10. | சுயநலமும் போட்டி மனப்பான்மையும் நிலவுகிறது | பொது நல மனப்பான்மை நிலவுகிறது. |



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

1. தனி உரிமையாளரின் பயன்கள் என்ன?
   அ) சிறுமுதல் ஆ) அவசர முடிவு
   இ) வரையறு முதல் ஈ) மேலாண்மை திறக்கும் எல்லை
2. கூட்டாண்மை ஏற்படுவது
   அ) சட்டத்தின்படி
   ஆ) வெளிபடுத்திய உடன்படிக்கையின்படி
   இ) வம்சாவழி சொத்துரிமையின்படி
   ஈ) வெளிபடை (அ) உட்கிடை
3. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   அ) தனிவனிகர் ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுபங்கு நிறுமம் ஈ) இந்த கூட்டு குடும்பம்
4. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு
   அ) அரசு நிறுமம் ஆ) பொதுக்கூட்குரு
   இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு
5. ஒருபன்னாட்டு நிறுமம்.........என அழைக்கப்படுகிறது
   அ) உலக அளவில் பெரியது ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) பொது கூட்டுறவு
6. தனியாள் வணிகம் துவங்க
   அ) குறைந்தத இருநபர்கள் தேவை ஆ) குறைந்தத ஏழு நபர்கள் தேவை
   இ) ஒரு நபர் மட்டும் தேவை
7. தனியாள் வணிகரின் பொறுப்பு
   அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது ஆ) சொத்து ஏற்ப வரையறுக்கப்பட்டது
   இ) வரையறாபொறுப்பு
8. உலகிலேயே தனி நபர் கட்டுபாடு தான் சிறந்தது என்று கூறியவர்
   அ) எச்.ஹேனே ஆ) வில்லியம் பேசட்
   இ) நைல் எச்.ஜெ. கோபி
9. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல்
10. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு
   அ) பூரண நல்ல நம்பிக்கை ஆ) முதலீட்டிற்கான தெகை இருத்தல்
   இ) கூடி தொழில் செய்ய விருப்பம்
11. கூட்டாண்மைபதிவு செய்தல்
   அ) 1949 சட்டம் ஆ) 1956 சட்டம் இ) 1932 சட்டம்
12. கூட்டாண்மையின் தோன்றும் உறவுமுறை
   அ) முதல்வர் மற்றும் முகவர் ஆ) உரிமையர் மற்றும் வேலையாளர்
   இ) எஜமானர் மற்றும் பணியாளர்
13. கூட்டாண்மை பதிவு
   அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின் பேரில்
   இ) அவசியமில்ல
14. பொது வரயறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை
   அ) 2 ஆ) 3
   இ) 7 ஈ) 10
15. தனி வரையறை நிறுத்தில் பங்குதாரரின் பொறுப்பு
   அ) பங்குகளின் செலுத்தப்பெற்ற மதிப்பளவாகும்
   ஆ) பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பு
   இ) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும்
   ஈ) பங்குகள் மீது கோரப்பட்ட தொகை அளவாகும்
16. நிறுமமொன்றின் வாழ்வுக்காலம் முடிவுக்கு வருவது எப்பொழுது எனில்
   அ) அதன் தோற்றுவிப்பாளர்கள் அனைவரும் இறந்தவுடன்
   ஆ) இயக்குனர்கள் அனைவரும் இறந்தவுடன்
   இ) அதிகமாக உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை பிறருக்கு மாற்றிக்கொடுத்து விட்டால்
   ஈ) மேற்சொன்ன எதுவும் இல்லை



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

17. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அட்டவணை A என்றது
அ) நிகழ்ச்சி குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்பு நிலைக்குறுப்பின் மாதிரி படிவம்
இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

18. தகவறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பை கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிருமம் பெற வேண்டும்.
அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள்
இ) 130 நாட்கள் ஈ) 60 நாட்கள்

19. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பவர் அதன்
அ) கடனாளர்கல் ஆ) உறுப்பினர்கள்
இ) கடன் வாடிக்கையர் ஈ) நிறுமத்தில் கடன்

20. ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது ஆண்டுக்கு வட்டி பெற உரிமை உண்டு
அ) 6% ஆ) 10%
இ) 12% ஈ) வட்டியில்லை

21. பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய காரணம்
அ) நிறுமத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த மறுத்தல்
ஆ) அழைப்புபணத்தை செலுத்த தவறுவது
இ) ஆண்டு பொதுகூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்

22. ................ எண்ணிக்கைக்கு மிகாத பொதுவரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பகுதி வகிக்கலாம்.
அ) 10 ஆ) 15 இ) 20 ஈ) வரம்பில்லை

23. நிறுமச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுவது
